**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**DW 1– OS. No. 38/2017 C/W OS No.100/17 C/W OS No.98/21**

2023 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு.சரஸ்வதி | தொழில் : |
| க/பெ. : திரு, ராமசாமி கவுண்டர் | வயது : 78 |
| முகவரி : | |

**பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி**

21.7.2011 தேதிய எனது பெயரிலான தான செட்டில்மெண்ட் பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். அது பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணம் மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளது என ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 25.7.2011 தேதிய ராமசாமி எழுதிக்கொடுத்த வர்த்தமான கடிதம் தாக்கல் செய்கிறேன். அது பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.(பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணம் மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளது என ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 22.11.2016 தேதிய தான செட்டில்மெண்ட்பத்திரம் தாக்கல் செய்கிறேன். அது பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.. (பிரதிவாதி தரப்பில் மோசடியாக உருவாக்கப்பட்ட பி.த.சா 1ன் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் மேற்படி ஆவணமும் மோசடியானது என ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). கார்பிரேசன் வங்கியில் 28.11.2016 தேதியில் பணம் செலுத்தியதற்கான அடிக்கட்டை ரசீதுகள் தாக்கல் செய்கிறேன். அது பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.(பிரதிவாதி தரப்பில் மேற்படி ரசீதுகளில் வங்கிக் கணக்கு எண்ணும் பணம் வைத்து இருப்பவர் பெயரும் இல்லை என ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 21.3.2017 தேதியிட்ட வங்கியில் வழங்கப்பட்ட கடிதம் தாக்கல் செய்கிறேன். அது பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.(பிரதிவாதி தரப்பில் வாதியும் சேர்ந்து பணம் செலுத்தியுள்ள நிலையில் வாதியின் பெயர் இல்லை என

ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 1.12.2016 தேதியில் கார்பிரேசன் வங்கியில் வழங்கப்பட்ட ரசீது தாக்கல் செய்கிறேன். அது பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.(பிரதிவாதி தரப்பில் பி.த.சா 1 மற்றும் 3 ன் கீழான மோசடியான தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் தொகை செலுத்தப்பட்டுள்ளதால் மேற்படி ஆவணம் செல்லத்தக்கது அல்ல என ஆட்சேபிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). எனது தரப்பு சாட்சியினை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை மனு அனுமதியின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.